**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 12.04.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

புதுடெல்லியில் உள்ள செங்கோட்டை வளாகத்தில் மத்திய பிரதேசத்தின் விக்ரமோத்சவ் என்ற 3 நாள் கலாச்சார விழாவை குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் இன்று தொடக்கி வைக்கிறார்.

அனுமன் ஜெயந்தி இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டி உள்ளார்.

இந்தியா-ஆஸ்திரியா இடையே பல்வேறு பிரிவுகளில் ஒத்துழைப்பின் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தி உள்ளார்.

*தன்கர் (17)*

புதுடெல்லியில் உள்ள செங்கோட்டை வளாகத்தில் மத்திய பிரதேசத்தின் விக்ரமோத்சவ் என்ற 3 நாள் கலாச்சார விழாவை குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் இன்று தொடக்கி வைக்கிறார். ஏப்ரல் 14 ம் தேதி முடிவடையும் இந்த கலாச்சார விழாவில், சாம்ராட் விக்ரமாதித்யரை அடிப்படையாக கொண்ட நாடகம் அரங்கேற்றப்பட உள்ளது. பேரரசர் விக்ரமாதித்யரின் வரலாறு மற்றும் அவரது அர்ப்பணிப்பை மையமாக கொண்டு கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த கண்காட்சியில், விக்ரமாதித்யர் மற்றும் அயோத்தி பற்றிய கலாச்சார மகிமை, மத்திய பிரதேசத்தின் சுற்றுலா தளங்கள், மற்றும் அம்மாநிலத்தில் முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு குறித்த காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. விக்ரமாதித்யரின் பிறப்பு முதல், பேரரசர் ஆனது வரையிலான அனைத்து கதைகளும் நாடகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 125 கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர். இந்நிகழ்ச்சியில் மத்திய பிரதேச முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சார துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் செகாவத் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

*அனுமன் ஜெயந்தி(2)*

அனுமன் ஜெயந்தி இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இது பற்றிய செய்தித்தொகுப்பு

(வாய்ஸ்)

*அனுமன் ஜெயந்தி வாய்ஸ்*

அனுமன் ஜெயந்தி இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாள் அனுமனின் பிறப்பை நினைவு கூர்வதாகும். புதுடெல்லியில் உள்ள கன்னாட் ப்ளேஸில் உள்ள பிரச்சீன் அனுமன் கோவிலில் அதிகாலை முதல் பக்தர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர். இந்த நிகழ்வை ஒட்டி, கோவில்களில் அனுமன் சாலிசா, சுந்தரகாண்டம், மற்றும் அகன்ட ராமாயணம் ஆகியவை பக்தர்களால் வாசிக்கப்பட்டு வருகின்றன.

அனுமன் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சங்கத் மோச்சன் அனுமனின் ஆசியுடன் அனைத்து மக்களும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், வாழ்வில் வளமாக இருக்க வேண்டுவதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜெய்சங்கர் (9)

இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டி உள்ளார். 2008 ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ம் தேதி மும்பையில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களில் முக்கிய குற்றவாளியான தஹாவூர் உசேன் ராணா-வை நாடு கடத்துவது குறித்து சமூக ஊடகங்களில் அமெரிக்க வெளியுறவு செயலர் திரு மார்கோ ரூபியோ-வின் பதிவிற்கு பதில் அளித்த டாக்டர் ஜெய்சங்கர் தாக்குதல்களில் பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

*அமித் ஷா* (11)

சத்ரபதி சிவாஜி மகராஜின் வரலாற்று சிறப்பு மிக்க ராய்கட் கோட்டையை நாட்டின் இளைஞர்களுக்கு உத்வேகத்தின் ஆதாரமாக விளங்குவதற்கு மத்திய அரசும், மகராஷ்டிர அரசும் உறுதி பூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். சத்ரபதி சிவாஜி மகராஜின் 345 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திரு அமித் ஷா, ராய்கட் கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மலரஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் பேசிய அவர், சுயராஜ்ஜியத்திற்கான போராட்டம் எப்போதும் நிறுத்தப்படக் கூடாது என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசு, சிவாஜி மகராஜின் தொலைநோக்கு பார்வையை உண்மையாக பின்பற்றி வருவதாகவும், நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக இந்தியாவை உருவாக்க பாடுபடுவதாகவும் கூறினார்.

*நிர்மலா* (12)

இந்தியா-ஆஸ்திரியா இடையே ஸ்டார்ட் அப் நிதி, பசுமை தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஒத்துழைப்பின் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தி உள்ளார். ஆஸ்திரிய தலைநகர வியன்னாவில் வெளிநாடு வாழ் இந்தியர்களிடையே உரையாற்றிய அவர், அந்நாட்டின் வளர்ச்சியில் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பை பாராட்டினார். இந்தியாவின் வளர்ச்சிக்கும், ஆஸ்ரியாவில் வசிக்கும் இந்தியர்கள் பங்காற்ற அவர் அழைப்பு விடுத்தார். ஆஸ்திரிய நிதியமைச்சர் உடனான தமது சந்திப்பால் இருநாடுகளின் நட்புறவு மேம்பட்டு உள்ளதாக குறிப்பிட்ட அவர், சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகன மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயலாற்றும் வாய்ப்புகள் குறித்து விளக்கி கூறினார்.

*சிவராஜ் சிங் சவுகான்* (10)

பாஜக வின் மூத்த தலைவரும், மத்திய வேளாண் அமைச்சருமான திரு சிவராஜ் சிங் சவுகான், தேசிய ஜனநாயக கூட்டணியின் 5 தொகுதி கட்சி தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தினார். பாட்னாவில் உள்ள பாஜக தலைமையத்தில் இன்று நடைபெற்ற கூட்டத்தில், மாநிலத்தில் உள்ள அரசியல் சூழ்நிலை மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் வருகை குறித்தும் விவாதிக்கப்பட்டது. கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த மூத்த ஜேடியு தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜீவ் ரஞ்சன் சிங், வரும் 24 ம் தேதி தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி மதுபானியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக் கூட்டத்தில் உரையாற்ற உள்ளதாக தெரிவித்தார்.

மோடி இரங்கல் (8)

பசுமைப் போராட்ட வீரர் தரிப்பள்ளி ராமையாவின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். லட்சக்கணக்கான மரங்களை நட்டு, பாதுகாப்பதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த தரிப்பள்ளி ராமையாவின் நிலைத்தன்மையை நினைவு கூர்வதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இயற்கை மீதான ஆழ்ந்த அன்பையும், எதிர்கால சந்ததியினருக்கான அக்கறையையும் அவரது அயராத முயற்சிகள் பிரதிபலிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் (11)

ஜம்மு-காஷ்மீரில் கிஷ்த்வார் மாவட்டத்தில் சத்ரு வனப்பகுதியில் நடைபெற்று வரும் என்கவுண்டரில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் பதுங்கியிருந்த இடத்தில் இருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சத்ரு பகுதியின் காடுகளில் பயங்கரவாதிகளின் நடமாட்டத்தை பாதுகாப்பு படையினர் அறிந்ததை அடுத்து, கடந்த புதன் கிழமை முதல் துப்பாக்கி சண்டை நடைபெற்று வருகிறது. நேற்று காலை பயங்கரவாதிகளுடன் ஏற்பட்ட கடும் துப்பாக்கி சண்டையில் தோடா மாவட்டத்தின் பதர்வா பகுதிக்கு பாதுகாப்பு படையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தினர். மேலும் அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தொடர்ந்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதுச்சேரி (3)

புதுச்சேரியில் கடுமையான வெப்பம் நிலவி வருவதை ஒட்டி, பொதுப்பணித்துறை குடிநீர் பிரிவு சார்பில், மக்களின் நலனுக்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. இது பற்றிய செய்தித் தொகுப்பு

(வாய்ஸ்)

ஹஜ் (6)

2025 ஆம் ஆண்டின் ஹஜ் பயணத்திற்கான ஏற்பாடுகளை மறு ஆய்வு செய்வதற்கு சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் சந்திரசேகர குமார், சவுதி அரேபியாவிற்கு சென்றுள்ளார். ஹஜ் பயணம் ஒரு புனிதமான யாத்திரை அனுபவமாகவும், சுகாதாரமான

மற்றும் மன அழுத்தம் இல்லாத வசதிகளை யாத்ரிகர்களுக்கு ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுவதாகவும், அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டு (15)

ஐஎஸ்எல் கால்பந்து இறுதிப் போட்டியில், மோகன் பாகன் சூப்பர் ஜெயண்ட் அணி இன்று பெங்களுரு எப்சி அணியை எதிர்கொள்கிறது. கொல்கத்தாவில் உள்ள விவேகானந்தா யுபா பாரதி கிரிரங்கனில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ளது.

புனேவில் நடைபெற்ற பில்லி ஜீன் கிங் கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் ஆசியா-ஓசியானியா குருப் 1 போட்டியில் இந்தியா- சீனா தைபே அணியை 2 க்கு 1 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. ஸ்ரீவள்ளி பாமிடிபதி மற்றும் வைதேகி சவுத்ரி ஆகியோர் பிளேஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் தொடரில், ஐதராபாத்தில் உள்ள ராஜீவ்காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியும், சன்ரைசஸ் ஐதராபாத் அணியும் களம் காண்கின்றன.

இந்த சீசனில் ஐதரபாத் ஒரு போட்டியில் மட்டுமே வெற்றி பெற்று புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. அதேநேரத்தில், பஞ்சாப் கிங்ஸ் அணி 6 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.